Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 1?

# ஈழநாடு

EELA NADU

மலர் 9
இதழ் 174
National Tamil Daily
தேசிய தினசரி

பிலவங்க ஆடி 19 ரபி ஆகி 26 வெள்ளிக்கிழமை [4-8-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# அகதிகள் புனர்வாழ்வு திட்டம் நாளை சென்னையில் ஆலோசனை

## மூதூர் கடல் தொழிலாளருக்கு வீடு கிடைக்கும்

### முதல்கட்ட வேலைகள் இம்மாதம ஆரம்பமாகும

மூதூர், வியாழன்

மூதூர் பகுதியைச்சேர்ந்த வீடில்லாத கடற்தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக 11 வீடுகள் கட்டிமுடிக்கப்படும் என அறியப்படுகின்றது. இதற்கான இடம் தெரிவுசெய்யப்பட்டு 11 வீடுகள்கட்ட கொந்தராத்துக்கான விண்ணப்பமும் கோரப்பட்டுள்ளது. இம்மாத நடுப்பகுதியில் வேலைகள் தொடங்கி அநேகமாக 3 மாத காலத்தில் முடிக்கப்படும் என நம்பப்படுகிறது. இதுவிஷயமாக மூதூர் கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும், மீன்பிடி, இலாகா உத்தியோகத்தர்களும் முயற்சி செய்து வந்தனர்.

மேலும் தொடர்ச்சியான வீடுகள் கட்ட மீன்பிடி இலாகா திட்டமிட்டுள்ளதாயும், இதுகுறித்து ஆராய சம்பந்தப்பட்ட அமைச்சு காரியாலயத்தைச் சேர்ந்த உயர்தர உத்தியோகத்தர்கள் வரக்கூடும் எனவும் நம்பகமாக அறியப்படுகிறது.

## தென் ராஜ்ய முதலமைச்சர் மந்திரிகள் மகாநாடு

சென்னை, ஆகஸ்ட் 3

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து சுமார் பதினைந்து மாத காலத்துக்குள் இந்தியா திரும்பிவந்து சேருவார்களென எதிர்பார்க்கப்படும் அறுபதினாயிரம் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினருக்குப் புனர்வாழ்வளிக்கும் 37 கோடி ரூபாய் திட்டங்கள் பற்றி விரிவாக ஆராய்வதற்குத் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், மைசூர் ஆகிய தென்னிந்திய ராஜ்யங்களின் முதல் அமைச்சர்கள் நாளை சென்னையில் கூடுகின்றனர்.

இந்திய அகதிகள் புனர்வாழ்வுத் துறை அமைச்சர் திருஜே.எல். ஹாத்திகூட்டும் இம்மகாநாட்டில் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் இரண்டாவது காரியதரிசி என். ராஜகுமார், இலங்கையில் முன்பு இந்திய உதவி ஹைகமிஷனராகக் கடமையாற்றிய திரு. கே. வி. நாயர் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

தமிழ்நாடு முதல்அமைச்சர் திரு. ஸி, என். அண்ணாதுரை, மைசூர்முதல் அமைச்சர் திரு. என். நிஜலிங்கப்பா, ஆந்திரமுதல்அமைச்சர் திரு. பிரமானந்தரெட்டி, கேரள முதல் அமைச்சர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் ஆகியோர் நாளை சனிக்கிழமை சந்தித்துப் பேசுவதற்கு முன்னர் தென்னிந்திய ராஜ்யங்களின் அதிகாரிகளும் இலங்கையில் உள்ள இந்திய ஹைகமிஷன் அதிகாரிகளும் வெள்ளிக்கிழமை கூடி ஆலோசனை செய்யவிருக்கின்றனர்.

பாகிஸ்தானிலிருந்தும் பர்மாவிலிருந்தும் இந்தியா திரும்பிய இந்திய வம்சாவழியினரான அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கதை விட இலங்கையிலிருந்து திரும்பி வரும் இந்திய வம்சாவழியினருக்கு நல்ல முறையில் புனர்வாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என்ற ஆர்வம் தென்னிந்திய அதிகாரிகள் மத்தியில் நிலவுவதாகத் தோன்றுகிறது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதில் இந்திய அசிரத்தை காட்டுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு இடம் வைக்கக்கூடாது என்ற மனப்பான்மையும் இந்திய அதிகாரிகளிடமும் இந்திய அரசியல் வட்டாரங்களிலும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு. கேரளம், மைசூர் ஆகிய தென்னிந்திய ராஜ்யங்களில் குடியேற்றப்படவிருக்கும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கு, அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன், பண உதவி அளிப்பது பற்றியும், புதிய தோட்டங்கள், கால்நடைப் பண்ணைகள். நெசவு நிலையங்கள் ஆகியவைகளை இலங்கையிலிருந்து திரும்புவோருக்கென விசேஷமாக அமைத்

[6-ம் பக்கம் பார்க்க]

வடபகுதி அஸைஸ் விசாரணை

## ''மூவாயிரம் ரூபாய் பெறுமதியான கள்ள நோட்டுக்கள் தேவையென்றேன்''

### வேலணை கள்ள நோட்டு வழக்கில் 'மில்முதலாளியாக' நடித்தவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''மூவாயிரம் ரூபாய் பெறுமதியான கள்ளநோட்டு கொண்டுவரும்படி நான் கூறினேன் கள்ள நோட்டு கொண்டுவருவதாககூறி ஓர் ஒழுங்கையால் இரு எதிரிகளும் சென்றுர்கள். நாங்களும், மெல்ல மெல்ல அவர்கள் பின்னல் சென்றோம். சண்முகரத்தினம் என்பவரின் வீட்டில், 1-ம், 2-ம் எதிரிகளும் சண்முகரத்தினமும் கள்ள நோட்டுக்களை எண்ணிக்கொண்டிருந்தார்கள். என்னுடன்வந்த மென்டிசும், பாஸ்கரனும், தாங்கள் பொலிஸ் அதிகாரிகள் எனக்கூறி அந்தநோட்டுகளை கைப்பற்றினுர்கள்.''

வேலணை கள்ள நோட்டு வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த மார்க்கண்டு மேற்கண்டவாறு கூறினுர்.

மார்க்கண்டு மேலும் கூறியதாவது: நான் இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் வீட்டிற்கு போனபின் சோமு வந்தார். பருத்தித்துறையிலுள்ள ஓர் இடத்தில் வைத்திலிங்கம் என்பவர் மூலமாக கதிரேசு என்பவரிடமிருந்து கள்ளநோட்டு எடுக்கலாம் என்று சோமு கூறினுர்.

என்னை மில் முதலாளியாகவும், சோமுவை எனக்குக் கீழ் வேலைசெய்யும் தொழிலாளியாகவும், நடிக்கும்படி சப் இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் கூறினுர். பாஸ்கரன் எனது கார் சாரதியாக நடிப்பதாகச் சொன்னுர்.

மூவரும் காரில் ஏறி தும்பளை நோக்கிச் சென்றோம். காரை ஒழுங்கையில் நிறுத்திவிட்டு சோமு 'பரியாரியார் பரியாரியார்' என்று கூப்பிட்டார். பரியாரியார் வெளியில் வந்தார். சோமு அவருடன் கதைத்துவிட்டு காருக்கு அருகில் வந்தார். சோமு என்னை 1-ம் எதிரிக்கு மில் முதலாளியென்றும், எனக்கு கள்ள நோட்டு தேவைப்படுவதாகவும் கூறினுர். 1-ம் எதிரி வைத்திலிங்கம் தன்னிடம் கைவசம் கள்ளநோட்டு இல்லையென்றும் மறுநாள் காலை 5 மணிக்கு வந்தால் கள்ள நோட்டு எடுக்கலாமென்றும் கூறினுர். காலையில் வருவதாக கூறிவிட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்றோம். இன்ஸ்பெக்டர் குமாரிடம், நானும், சோமுவும், பாஸ்கரனும் வாக்குமூலமளித்தோம். எங்களுடன் சார்ஜண்ட் மென்டிசை அனுப்புவதாக குமார் கூறினுர். மறுநாள் காலை 5 மணிக்கு வருவதாக கூறிவிட்டுச் சென்றோம்.

பாஸ்கரன் வீட்டில் தங்கிவிட்டுக் காலை 5 மணிக்குப் பொலிஸ் நிலையத்துக்கு வந்தோம். சார்ஜண்ட் மென்டிஸ் வேட்டி.சேட் அணிந்து வந்தார். தும்பளைக்குப் போய் 1-ம் எதிரியைச் சந்தித்தோம். அப்பொழுது எங்களிடம் கள்ளநோட்டு இருக்கவில்லை. 2-ம் எதிரியும் வந்து காரில் ஏறிக் கொண்டார்.

வேலணைக்குப்போகவேண்டுமென 2-ம் எதிரி கதிரேசு

[6-ம்பக்கம் பார்க்க]

மூதூரில்

## காக்கா வலிக்கு 6குழந்தைகள் பலி

மூதூர், வியாழன்

மூதூருக்கு அருகேயுள்ள சேனையூர் என்னும் கிராமத்தில் காக்காவலி என்னும் பயங்கர குழந்தை நோய்க்கு இரு குழந்தைகள்பலியானுர்கள். இக்குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும்போதுவழியிலேயே மரணமானுர்கள். இந்நோயால் பிடிக்கப்பட்ட வேறு இரு குழந்தைகள் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மாண்டனர். மூன்று தினங்களில் எல்லாமாக ஆறு குழந்தைகள் இந்நோய்க்குப் பலியாகியுள்ளனர்.

## பிச்சைக்காரருக்கு விடுதி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரதானவீதிகளில் வசிக்கும் சாக்கடைவாசிகளையும் பிச்சை எடுப்போர்களையும் அப்புறப்படுத்தி அவர்களுக்கு ஒரு விடுதித்திட்டத்தைக் கொண்டுவர இலங்கை சமூக சேவைப்பகுதி திட்டமிட்டுள்ளது. வெளி நாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு இப்பிச்சைக்காரர்கள் தொல்லை கொடுக்காதிருக்கவும், வெளிநாட்டவர் இலங்கையைப்பற்றிக் குறைவாக மதிக்கப்படாமலும் இருக்கும் நோக்கமாகவே இத்திட்டம் அமைந்துள்ளது

இத்திட்டத்தின்கீழ் இலங்கையின் பல்பாகங்களிலும் அமைக்கப்படவிருக்கும் பிச்சைக்காரர்கள் விடுதிகளில் ஒன்று யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட விருக்கிறது. இவ்விடுதியையாழ்ப்பாணத்தில் பண்ணையில் ஆரம்பித்து வைப்பதற்காக கொழும்பு சமூக சேவைப் பகுதி அதிகாரி திரு. ஜே. என். அப்பாத்துரை யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தெரிகிறது.

இவ்விடுதிகளில் சேர்க்கப்படும் பிச்சைக்காரர்களுக்கு இப்பகுதியினர் குடிசைக் கைத்தொழில்களைப் பயிற்றுவித்து புனர்வாழ்வு அளிக்கத்திட்டமிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

எனக்கு நானே நன்மைசெய்துகொண்டு ஒருமோட்சத்தை அடைவதைவிட மற்றவர்களுக்கு நன்மை செய்து ஆயிரம் நரகங்களுக்கும் செல்ல நான் தயாராய் இருக்கிறேன்.

—சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு

[illegible] National Tamil Daily
[illegible]: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

[illegible] பிலவங்க௵ ஆடி௴ 19௳ (4-8-67)

## புனர் வாழ்வு திட்டம்

இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இந்திய வம்சாவளியினருக்குப் புனர்வாழ்வழிக்கும் திட்டம் பற்றி ஆராய்வதற்கு நாளை சென்னையில் தென்னிந்திய ராஜ்யங்களின் நான்கு முதன் மந்திரிகளும் கூடிப் பேசவிருக்கின்றனர். பேச்சுவார்த்தைகளின் பயனாக நல்ல திட்டங்கள் உருவாகுமென்றும் இங்கிருந்து செல்வோர் புதிய வாழ்வை ஆரம்பிக்க வழி பிறக்குமென்றும் எதிர்பார்ப்போம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி பதினைந்து வருடங்களில் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் ஐந்தேகால் லட்சம் பேர் இந்தியா திரும்ப வேண்டும். அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து பதினைந்து மாத காலத்துக்குள் அறுபதினாயிரம் பேர் இந்தியா திரும்புவர் என இலங்கையும் இந்தியாவும் எதிர்பார்க்கின்றன. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பலரும் தமிழ் நாடு, கேரளம், மைசூர், ஆந்திரா ஆகிய ராஜ்யங்களைச் சேர்ந்த பரம்பரையினராதலால் அவர்களுக்கு புனர் வாழ்வளிப்பதில் இந்த தென்னிந்திய ராஜ்யங்களுக்கே அதிக அக்கறையும் பொறுப்பும் இருக்கின்றன. இதனால்தான் தென்னிந்திய ராஜ்யங்களின் முதல் அமைச்சர்களின் மகாநாட்டை இந்திய அகதிகள் புனர் வாழ்வு அமைச்சர் திரு. ஜே. எல். ஹாத்தி நாளை சென்னையில் கூட்டுகிறார். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் தொழில், வாழ்க்கை முறைகளை, நன்கு அறிந்துள்ள இந்திய ஹைகமிஷன் இரண்டாவது அதிகாரி திரு. என். ராஜகுமாரும் இலங்கையில் முன்பு இந்திய உதவி ஹைகமிஷனராகக் கடமையாற்றிய திரு. கே. வி. நாயரும் கலந்து கொள்வது இந்திய வம்சாவழியினருக்கு எந்தெந்த முறையில் புனர்வாழ்வளிக்கலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்குமென நம்பலாம்.

இந்தியா திரும்பி வந்து சேருவோர் புதிதாக வாழ்க்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் இடைக்கால உதவியாக பண உதவி அளிப்பது, புதிய தோட்டங்கள், கால்நடைப் பண்ணைகள், நெசவு நிலையங்கள் அமைத்து அவர்களுக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. தமிழ் நாடு, மைசூர் ராஜ்யங்களிலும் அந்தமான், நிக்கோபர் தீவுகளிலும் புதிதாக ரப்பர் தோட்டங்கள் அமைப்பது, தமிழ் நாட்டில் தனியார் துறையில் சில பகுதிகளை வேலை வழங்க ஒதுக்குவது ஆகியன நாளைய மகாநாட்டில் விவாதிக்கப் படவிருக்கும் புனர் வாழ்வுத் திட்டங்களில் சில எனத் தெரிகிறது.

இந்திய வம்சாவழி மக்கள் உழைப்பாளிகள். அவர்களைச் சரியாகப் பயன் படுத்தக் கூடிய முறையில் திட்டங்கள் அமைத்தால் அவர்களால் தென்னிந்திய ராஜ்யங்களுக்கும் இந்திய நாட்டுக்கும் இலாபமே தவிர நஷ்டமேற்படாதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

பர்மா, திபெத், கிழக்கு பாகிஸ்தான் போன்ற இடங்களிலிருந்து இந்தியா வந்துள்ள அகதிகள் பிரச்னை இந்தியாவுக்குப் பெரும் பொறுப்பும் சுமையுமாயுள்ளன ஆயினும் இலங்கையிலிருந்து திரும்புவோருக்கு இலங்கையும் வீண்கெடு பிடிகளில்லாது தாராளமனதுடன் நடந்து கொள்வதன் மூலமும் தென்னிந்திய ராஜ்யங்களும் 'உழைப்பாளிகள்' என்ற முறையில் அதற்கேற்ற மதிப்புக் கொடுத்து நடந்து கொள்வதன் மூலமும் அவர்கள் கண்கலங்காமல் தமக்கும் நாட்டுக்கும் பயன் அளிக்கக் கூடிய முறையில் வாழ முடியும். இலங்கையும் சரி, இந்தியாவும் சரி அவர்களும் மனிதர்கள் என்பதை நினைத்து அவர்கள் பிரச்னைகளை மனிதப் பிரச்னையாகக் கருதி நடந்து கொண்டால் போதும்.

# கொடிகாமத்தில் அமைதியை நிலைநாட்ட
## சமாதான மகாநாடு
### பொலிஸ் அதிகாரி முயற்சி
### இரவும் பகலும பொலிசார் ரோந்துக் காவல்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமத்தில் நடந்த கலவரத்தைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலையைக் கட்டுப்படுத்தி மீண்டும் அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட ஒரு சமாதான மாநாட்டை கூட்டுவதற்கு பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் முயற்சி செய்து வருகிறார்.

இம் மாநாட்டில் பெரும்பான்மை சமூகத்தவர்களையும், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் அழைத்து அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொடிகாமத்தில் நேற்று மாலை மீண்டும் ஏற்பட்ட கலவரத்தில் மூவர் காயமடைந்ததாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக சாவகச்சேரி பொலிசார் ஐவரைக் கைது செய்து பிணையில் விடுதலை செய்துள்ளனர்.

கொடிகாமத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்த நேற்று நள்ளிரவு 12 மணி முதல் யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டியொன்று ரோந்து சுற்றி வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை காலை நிலைமையை நேரில் ஆராயும் பொருட்டு பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவிப் பொலிஸ்சுப்பிரிண்டன் திரு. வீரசிங்கா ஆகியோர் கொடிகாமத்திற்கு செல்ல தீர்மானித்துள்ளனர்.

நிலைமை கட்டுக் கடங்கும் வரை நிரந்தர பொலிஸ் கோஷ்டியொன்று கொடிகாமத்தில் கடமையாற்றுமென்றும் சார்ஜன்ட் தலைமையில் 4 பொலிசாரைக் கொண்ட கோஷ்டியொன்று அனுப்பப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கொடிகாமப் பகுதிகளிலுள்ள கள்ளுக் கொட்டில்கள் பல தீ வைக்கப்பட்டிருப்பதாகவும் பொதுமக்கள் வெளியில் நடமாட அஞ்சுவதாகவென்றும் பொலிஸ் சுப்பிரிண்டனுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மந்துவில் மீசாலை, மிருசுவில், நாவற்காடு, வரணி, கச்சாய், அல்லாரை பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் ரோந்து சுற்றி வருகின்றனர்.

நேற்றிரவு கொடிகாமம் பஸ் நிலையத்தில் செஞ்சட்டை அணிந்த சிலரை, ஒரு கோஷ்டி தாக்கியதாகவும் பொலிசார் அக்கோஷ்டியை விரட்டி நிலைமையை கட்டுப் படுத்தியதாகவும் தெரியவருகிறது.

கொடிகாமத்தில் நாளை சந்தைமுறையாததால்மேலதிகபொலிஸ் கோஷ்டி அனுப்பப்படுமென்றும்இரவு8மணிக்குப்பின் வீதியில் செல்வோர்கைது செய்யபடுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அமைதி நிலவும் வரை பொலிசார் ரோந்து சுற்றி வருவார்களென்றும் தெரியவருகிறது.

# 'ஆபாசசெய்திகளைபடியாதீர்'
## மாணவருக்கு பேராசிரியர் அறிவுரை

சாவகச்சேரி, வியா

"வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் போராட்டம் உண்டு. இப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற நீதி நூலான கம்பராமாயணத்தையும், சமய நூலான கந்த புராணத்தையும் விரும்பிக் கற்கவேண்டும். இந்நூல்களின் சிறப்பினை அறியவும் அத்தோடு விஞ்ஞானத்துறையில் தேர்ச்சி பெறவும் ஆங்கிலத்தைக் கட்டாயமாகக்கற்க வேண்டும்" என சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரிமண்டபத்தில் வடபகுதி வித்தியாதிபதி திருமதிஆர். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற கல்லூரி வருடாந்தப் பரிசளிப்புவிழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் திரு. ஏ. டபிள்யூ. மயில்வாகனம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில்ஆபாசச்செய்திகளையும் கட்டுரைகளையும் விரும்பிப்படிக்கும் வாலிபர்கள் அதைவிடுத்து நாட்டிற்கும் இனத்திற்கும் தமக்கும் நன்மை தரவல்ல பண்டைய நீதி நூல்களைக்கற்க வேண்டும்" என்றார்.

திருமதி வி. என். நவரத்தினம் மாணவமாணவியருக்கு பரிசில்கள் வழங்கினார்.

# வீதிஒழுங்குகளை மீறும் சாரதிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

வீதி ஒழுங்குகளை மீறும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள்மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்துவருவதாகவும், இவற்றைக் கட்டுப்படுத்த இம்மாதம் 15-ம் தேதி முதல் வீதி ஒழுங்குகளை மீறும் பஸ்சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக, இலங்கை போக்குவரத்துச் சபை முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## இன்றைய பலன்

4-8-67
வெள்ளிக்கிழமை
[ஆடிமாதம்19-ந்திகதி]

நட்சத்திரம் - புனர்பூசம்
திதி திரயோதசி பகல் 10-38 வரை மேல் சதுர்த்தசி
சுபநேரம் 6-04-7-34
ராகுகாலம்10-34-12-04

மேடம்- தானியச் சிறப்பு
ரிஷபம்- செலவுகள் அதிகம்
மிதுனம் - உடலில் வெடிப்பு
கடகம்- குடும்ப நலன்
சிங்கம்- ஆசார குறைவு
கன்னி- மனையாட்சி மலரும்
துலாம்- நல்லவை நடக்கும்
விருச்சிகம்- சத்துரு உபாதை
தனுசு - குடும்பத்தில் கொண்டாட்டம்
மகரம்- பந்துக்களால் பரபரப்பு
கும்பம்- தெய்வ வழிபாடு
மீனம்- பிரயாணச் சுகம்

—ஜோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## "எதிர்ப்பு தெரிவியுங்கள்"

—ஏ. அமிர்தலிங்கம்

வட்டுக்கோட்டைவியா.

"மாணவர்களின் கல்விக்காக அரசாங்கம் தனது வருமானத்தில் பாதியைச் செலவு செய்கிறது. கல்வித்துறையில் பல முன்னேற்றத் திட்டங்களை அது தயார் செய்கிறது. இவற்றை நாம் சரியான முறையில் பயன் படுத்த வேண்டும். ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைத்துப் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். பார்லிமெண்டுக்கு வரவிருக்கும் கல்வி மசோதாவில் மிக விழிப்புடனிருந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். தமிழ் எம். பி.க்களாகிய நாங்களும் பிரதமரைச் சந்தித்து புதிய கல்வி மசோதாவிலுள்ள குறைபாடுகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளோம்" என பிலவத்தை அமெரிக்க மிஷன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க ஆண்டு விழாவில் பேசியவட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினார்.

வித்தியாதிகாரி திரு. சபாபதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் டாக்டர் அ. கா. குமாரசாமி, டாக்டர் முருகேசபிள்ளை ஆகியோரும் பேசினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன.

## நாட்டிலும் நகரிலும

நினைக்க நினைக்க இனிக்குது, தம்பி! சொல்லச் சொல்ல சுவைக்குது தம்பி! கேட்கக் கேட்க கிறுங்குது, தம்பி!

என்ன, அப்படி இனிக்கிறது அண்ணை! என்று கேட்கிறீர்களா?

யாழ்ப்பாணப் பனங்கொட்டை என்று எள்ளி நகையாடிய காலம் போய் விட்டது, தம்பி! ஆனபடியால் நான் துள்ளி விளையாடுகிறேன்.

யாழ்ப்பாணத்து முருங்கைக்காயே, வருக! யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயமே, வருக! யாழ்ப்பாணத்து செத்தல் மிளகாயே வருக! யாழ்ப்பாணத்து உருளைக்கிழங்கே வருக! யாழ்ப்பாணத்து மாம்பழமே, வருக!

இப்படி நமது தென்னிலங்கை சகோதரர்கள் யாழ்ப்பாணத்து சரக்குகளை வரவேற்கிறார்கள். இப்பொழுது!

பம்பாய்வெங்காயம், உருளைக்கிழங்கு முதலிய உணவுப்பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் நிறுத்திவிட்டது. வெளிநாடுகளில் இருந்துவரும் இப் பொருட்களால் அந்நிய செலாவணி போகிறது என்பதுதான் இதற்குக் காரணம்.

இப் பொருட்களை இப்பொழுது இலங்கையிலேயே உற்பத்திசெய்ய முயற்சிகள் நடக்கின்றன, இம் முயற்சிகளில் யாழ்ப்பாணக் குடாநாடு முன்னணியில் நிற்கிறது.

இலங்கைக்கு போதுமான வெங்காயமும், மிளகாயும் யாழ்ப்பாணத்திலேயே இப்பொழுது விளைகின்றன. எங்களுக்கு தேவையான உருளைக்கிழங்கில் பெரும் பகுதியும் இப்பொழுது யாழ்ப்பாணக்குடாநாட்டில் தான் உற்பத்தியாகிறதாம்.

இந்த விபரங்களை சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஒரு கனம் மந்திரியே தெரிவித்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

முற்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு நல்ல வருமானம் கொடுத்துவந்த புகையிலைக்கு இப்பொழுது செல்வாக்கு குறைந்து கொண்டுவருகிறது. தென்னிலங்கையில் யாழ்ப்பாணச் சுருட்டு புகைப்பவர்களின் சந்ததிகள் மாற புதிய சந்ததிகள் வெள்ளைச்சுருட்டையே விரும்புகின்றார்கள். மலையாளம் முதலிய வெளியூர்களுக்கும் நமது புகையிலை இப்பொழுது ஏற்றுமதி செய்வதில்லை.

ஆகையால் புகையிலைத் தோட்டம் செய்பவர்கள் இனிமேல் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. காலம் மாறிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் புகையிலைக்கு கிராக்கி இருந்தது; நல்ல காசு வந்தது.

இப்பொழுதுபுகையிலைக்கு கிராக்கி குறைந்து வருகிறபடியால் புகையிலைத்தோட்டம் செய்பவர்கள், உருளைக்கிழங்கு முதலிய வேறு பணம் தரும் பயிர்களைச் செய்ய முற்படவேண்டும். யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் உணவுப் பண்டங்களுக்கு. தென்னிலங்கையில் பெருமதிப்பு இருக்கும்வரையில் இங்குள்ள கமக்காரருக்கு கவலையில்லை.

வசதியுண்டு; வரவேற்புண்டு; வருமானமுண்டு! ஊக்கமும் உழைப்பும் அவசியம்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் நட்புறவை வளர்க்க அயூப்கான் ஆவல்; இந்திராவரவேற்பு





## உள்நாட்டு வெளிநாட்டு பிரச்னைகள் பற்றியும் இந்தியப் பிரதமர் கருத்து

புதுடில்லி, ஆக. 3

இந்தியாவுடன் சிநேகபூர்வமான உறவுகளை விரும்புவதாக அண்மையில் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் கூறியுள்ளதை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வரவேற்றுள்ளார்.

நேற்றிரவு இந்தியப் பத்திரிகைச் சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையில், இந்தியா எப்போதுமே பாகிஸ்தானுடன் நல்லுறவுகளைவளர்க்கத் தன்னாலியன்றதைச் செய்து வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### மேற்கு ஆசியா

மேற்கு ஆசியா பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில், இது சம்பந்தப்பட்ட அரசாங்கக் கொள்கை தேசிய நலன்களுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளதாகக் கூறினார்.

இந்திய அரசின் கொள்கை இஸ்ரேலுக்கும், யூதர்களுக்கும் எதிரானதொன்றாகும் எனச் சிலர் சுமத்தும் குற்றச் சாட்டுகளைப் பிரதமர் இந்திரா மறுத்தார். யூத மக்களுடன் இந்தியாவுக்கு எப்போதுமே நட்புறவு இருந்து வந்துள்ளதாக அவர் கூறினார் ஆக்கிரமிப்பைத்தான் இந்தியா எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### கட்சிவிட்டு கட்சி பாய்வோர்

உள்நாட்டு விவகாரங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறும் அங்கத்தவர் பிரச்னை பற்றி தாம் எதிர்க்கட்சிகளுடன் ஆலோசிக்க இருப்பதாகப் பிரதமர் தெரிவித்தார். இத்தகைய அங்கத்தவர்கள் திரும்பவும்தேர்தலில்தோற்றுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுவதும், இவர்களுக்கெதிராக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்கக் கூடுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### மத்திய பிரதேசம்

மத்தியப் பிரதேசத்தில் இடைக்காலத் தேர்தல்நடாத்துவதையே சொந்தத்தில் தாம் ஆதரிப்பதாகப் பிரதமர் இந்திரா அறிவித்தார். காங்கிரஸிலிருந்து பல அங்கத்தவர்கள் எதிர்க்கட்சி அணியில் சேர்ந்துள்ள காரணத்தால், அவர்கள் திரும்பவும் மக்களிடம் வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டியதே முறையாகும் எனத் தாம் எண்ணுவதாக அவர் கூறினார். ஆனால், இதையிட்டுப் பலதத உணர்வு கட்சியில் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

### கேரோ

கேரோக்கள் பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில், நாட்டின் உற்பத்தியைத் தடை செய்யும் எதுவும் நல்லதாக இருக்க முடியாது என்றார்.

வரட்சி காரணமாகவும், பொருளாதார ஸ்திரமற்ற நிலையினாலும் தோன்றியுள்ள நெருக்கடியை முறியடிப்பதே நாட்டு மக்களின் முக்கிய கடமையாக இருக்க வேண்டுமென்றார்.

### நெருக்கடி இல்லை

நாட்டின் தலைமையில் எவ்வித நெருக்கடியும் இருப்பதாகத் தமக்குத் தெரியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

### ராஜாக்கள் மான்யம்

முன்னாள் மகாராஜாக்களுக்கு அரசாங்கம் அளித்து வரும் மான்ய நிதியை நிறுத்தும் விஷயம் பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில், அதைப் பற்றிய எல்லா அம்சங்களையும் அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாகவும், அது ஒரு தனிப்பட்ட விவகாரம் அல்லவென்றும், வேறு பல பிரச்னைகளுடன் இணைந்த தொன்றாகுமெனவும் கூறினார்.

## காங்கோ வீரர் 50 பேர் கொலை

பிரசவில், ஆக 3

கொங்கோ அரசாங்க துருப்பினருக்கும் புரட்சிக் கூலிப்பட்டாளத்தினருக்குமிடையே புக்காவோ என்னும் இடத்துக்கருகே நடைபெற்ற சண்டையில் 50 கொங்கோலிய போர்வீரர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்களையும்யந்திரத்துப் பாக்கிகளையும் கொங்கோ துருப்பினர் இழந்தனர்.

## அமெரிக்க ராஜாங்கஇலாகா மறுப்பு

வாஷிங்டன், ஆக. 3

வடவியட்னாமுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இறங்கும் நோக்கத்துடன், அதைச் சமாதானத்துக்குத் தூண்டும்வகையில், அதன்மீதான குண்டுவீச்சில் தளர்ச்சியை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளதென்ற செய்தியை அமெரிக்க ராஜாங்க இலாகா மறுத்துள்ளது.

## கார்டூமில் கூடியுள்ள அரபு வெளியுறவு மந்திரிகள்மாநாடு

கார்டூம், ஆக. 3

கார்டூமில் கூடியுள்ளஅரபு நாடுகளின் வெளியுறவு மந்திரிகள், ஓர் அரபு உச்சி மாநாட்டுக்கான தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஆசியப் போரில் அமெரிக்காவின் பங்கினையிட்டு அரபு நாட்டு வெளியுறவு மந்திரிகள் கடுமையாகத் தாக்கிப் பேசினர். பிரிட்டனும் மேற்கு ஜெர்மனியும் கூட அவர்கள் கண்டனத்துக்குள்ளாகின.

மேற்கு நாடுகளுக்கு எண்ணெய் விநியோகம் செய்வதன் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை ஈராக் எதிர்த்து வாதாடியது. இதன் மூலம் அரபு நாடுகளுக்கான ஒரேயொரு பிரதான வருமானம் இழக்கப்படுவதாக ஈராக் கூறியது.

ஈராக்கின் இக் கருத்துக்கு மொரொக்கோவும் ஆதரவு அளித்தது.

## தென் இந்திய ரயில்வே எஞ்சினியர்

சென்னை, ஆக. 3

நோய் காரணங்காட்டி வேலைக்குச் செல்லாது நிற்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட தென் இந்திய ரயில்வே எஞ்சினியர்களை அந்த நடவடிக்கையைக் கைவிட்டு விட்டு மீண்டும் வேலைக்குத் திரும்புமாறு தென் இந்திய ரயில்வே எஞ்சினியர் சபை கேட்டுக் கொண்டுள்ளது.

## முதல் பரிசு பெற்றார்

சுழிபுரம், புதன்

கயரோக சங்க வலிகாமம் மேற்குக்கிளையினர் நடாத்திய நாடக எழுத்துப் போட்டியில் பண்டத்தரிப்பைச்சேர்ந்த திரு. தி. வ. அரியரத்தினம் முதல் பரிசைப் பெற்றார்.

## மூன்று காங்கிரஸ் அபேட்சகர் போட்டியின்றித் தெரிவு

ஸ்ரீநகர், ஆக, 3

ஜம்மு- காஷ்மீர் சட்ட சபைக்கு மூன்று காங்கிரஸ் அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் 8 ஸ்தானங்கள் காலியாகியுள்ளன. மீதி 5 ஸ்தானங்களுக்கும் இம்மாதம் 10-ந் திகதி வாக்கெடுப்பு ஆரம்பமாகும்.

## ம. பி. காங்கிரசிலிருந்து மேலும் 8 பேர் விலகுவர்

### முதல்மந்திரி தகவல்

போபால், ஆகஸ்ட். 3

காங்கிரஸ் கட்சியிலிருந்து மேலும் 8 அங்கத்தவர்கள் சம்யுக்த தளத்தில் சேர்ந்துவிடத்தீர்மானித்ததாக மத்தியப் பிரதேச முதல் மந்திரி திரு. கோவிந்த நாராயண் சிங்தெரிவித்துள்ளார்.

நேற்று பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இத்தகவலை வெளியிட்ட திரு. கோவிந்த நாராயண்சிங் அந்த எட்டு அங்கத்தவர்களின்பெயர்களை வெளியிட மறுத்துவிட்டார்.

## 2 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனா

புதுடில்லி, ஆக. 3

இந்திய — பாகிஸ்தான் எல்லையில் அத்துமீறிப் பிரவேசித்த 12 பாகிஸ்தானியர் மீது இந்திய எல்லைப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர். இரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றவர்கள் தப்பியோடிவிட்டனர்.

## டக்கா பல்கலைக்கழக மாணவர் பொலீசார்மோதல்; 40 பேர்காயம்

டக்கா, ஆக. 3

நேற்று டக்காப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பாகிஸ்தான் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்புகளில் 40 பேர் காயமடைந்தனர். இவர்களில் சிலர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

குறைந்த விலையில் உணவு, பத்திரிகைச் சுதந்திரம், அரசியற் கைதிகளின் விடுதலை இவற்றைக்கோரியே பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

### கல் வீச்சு

மாணவர்கள் கல் வீசியதைத் தொடர்ந்து, பொலிசார் குண்டாந்தடியடிப்பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர்.

## ஜப்பான் செல்ல முகம்மது அலிக்கு மறுப்பு

வாஷிங்டன், ஆக. 3

முகம்மது அலி என அழைக்கப்படும் காஷியஸ் கிளே ஜப்பான் செல்வதற்கு அமெரிக்க சமஷ்டி கோர்ட் அனுமதி மறுத்துள்ளது. இவர் உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியனாவார் வியட்னாம் போருக்குச் செல்லும் அமெரிக்க ராணுவத்தில் சேர மறுத்த குற்றத்திற்காக முகம்மது அலிக்கு 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் இதற்கு எதிராக அப்பீல் செய்துள்ளார். அப்பீலின் முடிவு இன்னும் வெளியாகவில்லை.

## ஷாங்-டுங் மாகாணத்தில் மா எதிர்ப்பு கலவரம்

### இராணுவத்தினர் அடக்கினர்

பீகிங், ஆக. 3

கிழக்குச் சீனாவிலுள்ள ஷாங்-டுங் மாகாணத்தில் மா-சே-துங்குக்கு எதிராகப் புதிதாக புதிதாகப் பலாத்காரம்தலைதூக்கியுள்ளது.

அம்மாகாணத்தில்ஏற்பட்டுள்ள கலவரங்களை அடக்க இராணுவப் பிரிவினர் அங்கு அனுப்பப்பட்டுள்ளன.

### விவசாயிகள் இம்சை

மாகாணத்தின் தலைநகரான சி-நானில், சில விவசாயிகளைப் பிடித்து இராணுவத்தினர் இம்சைப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

ஷாங்-டுங் மாகாணம் இதுவரைகாலம் மா-சே-துங்குக்கு ஆதரவுள்ளதாக இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கீன்யா உள்நாட்டுவிவகாரங்களில் சீனத்தூதரகம் தலையிடுகிறதாம்

நைரோபி, ஆக. 3

கீன்யாவின் உப ஜனாதிபதி அங்குள்ள சீனத் தூதரகம் கீன்யாவுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கீன்யா நாட்டின் உள்விவகாரங்களில் சீனத் தூதரகம் தலையிடுவதாக அவர் தெரிவித்தார்.

### பாட்ஜ்கள் விநியோகம்

மா சே துங் பாட்ஜ்களை விநியோகம் செய்வதுடன், சீனக் கம்யூனிஸ்ட் பிரச்சார இலக்கியத்தையும்பரவலாக விநியோகம் செய்வதாகச் சீனத் தூதரகத்தின் மீது கீன்யா உப ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நடவடிக்கைகளைக் கீன்யா அரசாங்கம் கவனித்து வருவதாகவும், தக்க நடவடிக்கைகளை அது மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல்-ஜோர்தான் துருப்புகள் துப்பாக்கிச்சண்டை; மூவர்காயம்

ஜெருசலம், ஆக. 3

இஸ்ரேலிய துருப்புகளுக்கும் ஜோர்தான் துருப்புகளுக்குமிடையே கிட்டிய தினங்களில் நான்கு தடவை துப்பாக்கிச்சண்டை நடைபெற்றுள்ளது.

இத்துப்பாக்கிச் சண்டையில் 3 இஸ்ரேலிய போர்வீரர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

### பரஸ்பரகுற்றச்சாட்டு

துப்பாக்கிப் பிரயோகத்தை முதலில் ஆரம்பித்தது பற்றி இருநாடுகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 மாதம் கடூழியம்

சாவகச்சேரி, வியா.

மூன்று சைக்கிள்களையும் ஒரு டிரான்ஸிஸ்டர் றேடியோவையும் திருடிய வாலிபர் மாஜிஸ்திரேட் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இவ் வாலிபருக்கு 13 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கல்வயலைச் சேர்ந்த செ. விஜயரத்தினம் [22] என்பவரே மேற்படி திருட்டில் குற்றப்பட்டவராவார்.

இவர்சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட் அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. த. இரத்தினநாதன் என்பவரின் 300 ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்றையும், மற்றும் அ. சோமசுந்தரம், வ. கனகரத்தினம் என்போரது இருசைக்கிள்களையும கே. பாலசுப்பிரமணியம் என்பவருடைய 400 ரூபாய் பெறுமதியான டிரான்ஸிஸ்டர் ரேடியோவையும திருடியதாக, எல்லாமாக நான்கு குற்றச்சாட்டுகளின் பேரில் சாவகச்சேரிப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் மூன்று சைக்கிள்கள் திருடிய குற்றத்திற்கு தலா மூன்றுமாதச் சிறைத்தண்டனையும், ரேடியோத்திருடிய குற்றத்திற்கு 4 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

## தாக்குதல் வழக்கு: 11ம்திகதி

உடுப்பிட்டி, வியா.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த திரு. சு. குகராஜன் என்ற ஆசிரியரை வேலியில் சாத்தித்தலையில் கொட்டனால் அடித்துக்காயம் விளைவித்ததாக அதே ஊரைச் சேர்ந்த கிட்டிணன் இராசேந்திரன் என்பவர் மீது பருத்தித்துறை பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட கரணவாய் தாக்குதல்வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு, கே. விக்னராசா முன்னிலையில் மீண்டும் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. ஆர். சோமசுந்தரம் காயங்களைப் பற்றி விபரித்தார். திரு. குகராஜன் உட்பட இன்ஸ்பெக்டர் திரு பூபாலசிங்கம், கே. வல்லிபாம ஆகியோர் சாட்சியமளித்தனர்.

எதிரி சார்பில் புரக்டர் திரு. வி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வகேட் திரு கே. விஎஸ். சண்முகநாதன் ஆஜராயிருந்தார். வழக்காளி தரப்பில் அட்வகேட் திரு. வி. என். நவரத்தினம் ஆஜரானார்.

விசாரணையின் பின்னர் எதிரியைக் குற்றவாளியாகக்கண்ட நீதிபதி ஆகஸ்ட் மாதம் 11 ம் திகதி தீர்ப்புக் கூறுவதற்காக வழக்கை ஒத்திவைத்தார்.

## கரை திரும்பினர்

காங்கேசன்துறை, வியா.

மயிலிட்டியில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இயந்திரப்படகும் மூன்று பேரும் நான்காம் நாள் கரை திரும்பினர். அருணாசலம் சின்னக்கிளி இரத்தினசிங்கம் ஆகிய மூவரும் நான்காவது நாள் காலை தாம் சென்ற படகுடன் தாளையடி கடற்கரையை அடைந்தனர். இவர்கள் சென்ற இயந்திரப்படகின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது காரணமாக மூன்று நாட்களும் இ... கடலில் தத்தளித்... மூன்று நாட்களும் உணவின்றித் தாம் பரிதவித்ததாக இவர்கள் கூறினர்.

## புத்தளத்தில் யாத்திரிகர் விடுதி

புத்தளம்-வியா.

புத்தளம் அநுராதபுரவீதியுல் சாதி மதபேதமின்றி யாத்திரீகர்கள்தங்குவதற்கு யாத்திரிகர் விடுதி ஒன்றுகட்டப்பட்டு வருகின்றது இதற்கு 25 ஆயிரம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## கவிஞர் குடுமபத்துக்கு ஞாபகார்த்த நிதி

கரவெட்டி, வியாழன்

அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா ஞாபகார்த்த நிதியொன்று திரட்டப்பட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு வழங்கப்படவிருக்கின்றது. இந்த நிதி அன்பளிப்பு இமமாதம் 21ந் தேதி கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் ஒரு வைபவத்தில் கையளிக்கப்படும். மேற்படி கல்லூரி அதிபர் திரு. எம். எஸ் சீனித்தம்பி இவ்வைபவத்துக்கு தலைமை தாங்குவார்.

## வருடாந்த உற்சவம

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 8ம் திகதி ஆரம்பமாகிறது. 17ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 18ம்திகதி தேர்த் திருவிழாவும் 19ம்திகதி தீர்த்தமும் நடைபெறும்.


## 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந்தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

1967 ஆகஸ்ட் 10-ந் திகதி 154-வது சீட்டிழுப்பு நிக்கவரெட்டியாவில் நடைபெறும்.

1-வது பரிசு ரூ. 100,000 அல்லது புத்தம் புதிய கிரிஸ்ரிலெர் வலிஎன்ட் காரும் ரூ. 76,000/ம்-X



2-வது பரிசு ரூ. 40,000 அல்லது புத்தம் புதிய ஒப்பெல் கடெற் காரும் ரூ. 25,575/ம் X



3-வது பரிசு ரூ 10,000 அல்லது புத்தம் புதிய ட்ராக்டர் (மெஸர்ஸ் சத்தியாவதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரான்ஸ்போட்டர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன்) கம்பெனி பட்டியல் விலை ரூ. 14,000/- வாகிய இந்த ட்ராக்டர் விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலை ரூ. 10,000 -க்கு வழங்கப்படுகின்றது.



X இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனிபட்டியல் விலைக்குக் குறைந்ததாகும்.

100 ஆறுதல் பரிசுகள்:

கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ 1251/10 பரிசு பெற்றுர்கள்.

இந்தக் கார்களையும், ட்ராக்டர்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்தல்

**29-7-67 ல் நடந்த கிளிநொச்சி வர்த்தகர் மு. அருளம்பலம்**

அவர்களின் மரணத்தின் போதும் அவரின் ஈமக்கிரிகைகளின்போதும் கலந்து கொண்ட உறவினர்களுக்கும் அனுதாபிகளுக்கும் எமது சிரம் தாழ்ந்த வணக்கத்தைத்தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
மகன்: அ. தேவராசா.
சகோதரர் மு. கிருஷ்ணராசா
அம்பிகா கூல்பார்,
முறிகண்டி.
கிளிநொச்சி. 49

## காங்கேயன் தெப்போற்சவம்

இன்று இரவு 7-00மணி தொடக்கம் காங்கேசன் துறை கடற்கரையில் காங்கேயன் தெப்போற்சவம் அதிவிமரிசையாக நடைபெறும்.

காங்கேயன்
தெப்போற்சவ சபை. 46

## இணுவில் தெற்கு விவசாயக்கழகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தோட்டப் பயிர்வகைகளான கத்தரி, மிளகாய், வாழை என்பவற்றின் ஃபாக காலங்களில் அவை களவு போகாவண்ணம் தடுப்பதற்குத் தொண்டர் படையுடன் பொலிஸ் உதவி தந்துஉதவ வேண்டுமென சுன்னுகம் பொலிஸ் அதிகாரியையும் வலிவடக்குக் காரியாதிகாரியையும் கேட்டுக்கொள்வதென்று இணுவில் தெற்கு விவசாயக்கழக அங்குரார்ப் பணக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கிராம சேவகர் திரு. சு. கனகசபை கூட்டத்துக்குத்தலைமை வகித்தார். பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரியப்பட்டனர்.

தலைவர்:- சு. கனகசபை உபதலைவர்கள்: சு. ஐயாத்துரை, வே. நல்லதம்பி. காரியதரிசி: நா. சின்னராசா, உபகாரியதரிசி, ச. இரத்தினப்பிரகாசம். தனாதிகாரி த. சிவசம்பு. 9பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## மரண அறிவித்தல்

### செல்லமுத்து, உடுவில், சுன்னுகம்

காலம் சென்ற நன்னித்தம்பியின் அருமை மனைவியும், அன்னப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை செல்லையா [ஆசிரியை, இராமநாதன் கல்லூரி], சோதிப்பிள்ளை நன்னித்தம்பி [ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி], தர்மரெத்தினம், சரஸ்வதி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஆறுமுகம் சின்னத்துரை, [கிளாங் கோலாலம்பூர்] க. செல்லையா (ஆசிரியர், சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அருமை மாமியாரும், திருமதி சின்னம்மா சுவாமிநாதன், திரு. சின்னத்துரை [ஆயுள்வேத வைத்தியர், உடுவில்], காலம் சென்ற முகாந்திரம் P. சுப்பிரமணியம் [O. A., கோப்பாய்] ஆகியோரின் அருமைச் சகோதரியும், கண்மலர் சுப்பிரமணியம், அன்னபூரணம் சின்னத்துரை ஆகியோரின் அருமை மைத்துனியுமாகிய செல்லமுத்து காலமாகிவிட்டார். தகனக்கிரியைகள் 2-8-67 பி. ப. 3 மணியளவில் பூவோடை மயானத்தில் நடைபெற்றன. 109

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 4-8-67

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, சுவாமி நாதத்தம்பிரான், 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 துதிப்பாடல்கள், 8-00 மாவிட்டபுரம் தேர்த்திருவிழா அஞ்சல், 10-30 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**
மாலை 3-30 பிறந்ததின வாழ்த்துக்கள், 4-00 மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா அஞ்சல்.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 முத்திநெறி—சைவச்சஞ்சிகை, 7-45 திருமுறை பயிற்சி—பி. ஏ. எஸ். ராஜசேகரன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 பாட்டு எம். ஏ. கலியாண கிருஷ்ணபகவதர்.

## உணுப்பிட்டியில் தேவாரவகுப்பு

வெள்ளவத்தை, வியா.

உணுப்பிட்டி இந்துசன்மார்க்க சங்கத்தின் சார்பில் ஆகஸ்ட்மாதம் 5ம்திகதி முதல் தேவார திருவாசக பாராயணவகுப்புகளை ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இம்மாதம் 12ம்திகதி சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசையைக் கொண்டாடுவதெனவும் சங்கச்செயலாளர் திரு. கோ. பாக்கியராசா தெரிவித்தார்.

## பகிரங்க விசாரணை நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து காரைநகர் செல்லவிருந்தபஸ் பிரயாணிகளை காரைநகர்கொண்டு செல்லமறுத்து பிரயாணிகளுக்கு அவமானமிழைத்ததாகக்கூறப்படும் கொண்டக்டர் மீதும், பஸ் சாரதி மீதும் பகிரங்க விசாரணை நடத்துமாறு வட இலங்கைப் பொதுப்போக்கு வரத்துபிரயாணிகள் சம்மேளன உபகுழு கொழும்பு இ. போ. ச தலைவரைக் கேட்டுள்ளது.

பொதுமக்களுடன் ஒத்துழைக்க வேண்டியஇ. போ. ச. ஊழியர்கள் பிரயாணிகளுக்குச்சவால் விடுவதும், அவமானப் படுத்துவதும் ண்டிக்கத்தக்க விஷயம் என்றும், சேவை என்ற சொல்லின் கருத்தைப் புரிந்து பொது மக்களுடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் மேற்படி சம்மேளன உபகுழு அறிவித்துள்ளது.

## இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி

புத்தளம், வியா.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி இயக்கத் தலைவர் அல்ஹாஜ்பதுயுதீன் முகமது வேருவலை எம். பி. ஜனுப் ஐ. ஏ. காதர், மூதூர் எம். பி. ஜனுப் எம். மஜீது, செனட்டர் ஜனுப் ஹமீம் உட்பட நாற்பதுபேர் புத்தள வட்டாரத்தில் கிராமங்கள் தோறும் இருபது பிரசாரக் கூட்டங்கள் நடத்த இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி ஒழுங்கு செய்துள்ளது. இம் மாதம் 4-ம் திகதி கற்பிட்டியிலும், 5-ம் திகதி புத்தளத்திலும் கூட்டங்கள் நடக்கும். புத்தளத்தில் எதிர்க்கட்சித் தலைவரான ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதான பேச்சாளராகக் கலந்து கொள்வார்.

## வரிவிளம்பரம

### விற்பனைக்கு

காணி

8 பரப்பு காணி யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் வண்ணுர் பண்ணை காரைக்காடு ரோட்டில் விற்பனைக்குண்டு. 2 பரப்பு துண்டுகளாகவும் பாதை வசதியுடன் வேண்டிக்கொள்ளலாம் விபரங்களுக்கு V. பொன்னுத்துரை, கே. கே. எஸ் வீதி, கொக்குவில். 2462

பனைகள்

கனகசபாபதிப்பிள்ளை மடத்து வளவில் உள்ள தொண்ணூறு (90) பனைகள் விற்பனைக்கு இருக்கிறது. இது விடயமாக தலைவருடன் தொடர்பு கொள்ளவும். கா. க. விசுவலிங்கம் J. P. தலைவர், கனகசபாதிப் பிள்ளை மடம், துறைமுகம், காரைநகர். 2467

### தேவை

ஆசிரியர்:

G. C. E. சாதாரண வகுப்புக்கு பௌதிகம், இரசாயனம், உயிரியல் ஆகிய பாடங்களும், தூயகணிதமும் தமிழிலும், ஆங்கிலத்திலும் கற்பிக்கக்கூடிய ஓர் ஆசிரியை மாத்தளையில் உள்ள டியூத்றறி ஒன்றுக்குத் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். வேலையின்றியிருக்கும் இந்தியன் பட்டதாரிகள் அன்றேல் G. C. E. உயர்தர வகுப்பில் சித்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும். க. சோமசுந்தரம், கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி, மாவிட்டபுரம். 2466

**வியாபாரம பெருக விளமபரமசெய்க**


# இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.

## பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினல் இழக்கப்படுகின்றன

[illegible]

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

[illegible]

# உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஜி. ஆர். கோர்ட்டில் நடித்துக்காட்டினார்

## சூட்டுச்சம்பவங்களை விளக்கியபோது நடந்தது

சென்னை, ஆகஸ்ட் 2 இன்று எம். ஜி. ஆர்—எம். ஆர். ராதா வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிராசிக்கூஷன் தரப்பில் சாட்சியமளித்த திரு. ராமச்சந்திரன், தாம் சுடப்பட்ட போது எப்படி அமர்ந்திருந்தார் என்பதையும், சூட்டுக்குப்பின்னர் ராதாவுக்கும் தமக்கும் இடையில் தயாரிப்பாளர் வாசு எவ்வாறு பாய்ந்து வந்தார் என்பதையும் கோர்ட்டில் செய்து காட்டினார்.

சாட்சிக்கூண்டில் இருந்து இறங்கி, அரசாங்கவழக்கறிஞரின் காலி ஆசனம்வரைக்கும் நடந்துசென்று அதில் அமர்ந்து, தாம் சுடப்பட்ட போது எவ்வாறு ஒருபக்கமாகத் திரும்பி உட்கார்ந்திருந்தார் என்பதையும், சுடப்பட்டதும் ஆசனத்தைதிடுமென பின்னால் தள்ளி இடது காதைப் பொத்திக் கொண்டதையும் அவர் கோர்ட்டில் நடித்துக் காட்டினார். பிறகு டெபியூடி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ரெங்கநாதனை எம். ஜி. ஆராக பாவனை செய்யும் படியும், அரசாங்க வழக்கறிஞரை ராதாவாக பாவனை செய்யும்படியும் கேட்டுக் கொண்டு அவர்களுக் கிடையில் பாய்ந்து சென்று, இப்படித்தான் சூடுநடைபெற்ற சிலவினாடிகளுக்குள் வாசு எனக்கும் ராதாவுக்குமிடையில் வந்தார்'' என்றும் எம். ஜி. ஆர். விளக்கினார்.

சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் எம். ஜி. ராமச்சந்திரனைச் சுட்டதாகவும் தம்மைச் சுட்டுக் கொண்டு தற்கொலைசெய்ய எத்தனித்ததாகவும் எம். ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கு இன்று மீண்டும் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எம். ஜி. ஆர். தொடர்ந்து விசாரிக்கப்பட்டார்.

தமது வீட்டின் வரவேற்பு அறையில் தாம் அமர்ந்திருந்த ஆசனத்தை தமக்குக் காட்டப்பட்ட படங்களில் எம். ஜி. ஆர். அடையாளம் காண்பித்தார். தானேசாத்திக்கொள்ளும் கதவு வழியாக உள்ளே வந்துதிரையை நீக்கி தாம் பார்த்ததாகவும் திரைக்கதவின் இடது புறமாக சோபாவில் ராதா அமர்ந்திருப்பதைக் கண்டதாகவும் அவர் கூறினார்.

ராதாவுக்கும், வாசுவுக்கும் வணக்கம் தெரிவித்துவிட்டு வழக்கமாக ஆசனத்தில் அமர்ந்ததாகவும், ராதா இருமிக்கொண்டிருந்ததால் என்ன விஷயமெனக் கேட்டதாகவும் எம். ஜி. ஆர். கூறினார்.

வாசு வீட்டில் ரசசாதமும், கீரையும் சாப்பிட்டதாவும் அதனால் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டிருப்பதாகவும் ராதா கூறினார். அப்படிக் கூறிக்கொண்டே ராதா அங்குமிங்கும் நடமாடினார். ஆசனங்களைச் சுற்றி அவர் நடந்தார். எனக்கு வலப்பக்கமாகக் கடந்துசென்றார். அதன்பின்னர் அவர் என்ன செய்தாரென்று தெரியவில்லை. நான் வாசுவுடன் பேசிக்கொண்டிருந்தேன்'' என்று எம். ஜி. ஆர் கூறினார்.

எம். ஜி. ஆரை ஒரு கதாநாயகனாகப் போட்டு படம் எடுப்பதில் கோயம்புத்தூரில் ஒரு கோஷ்டி விரும்புவதாக ராதா தம்மிடம் கூறியதாக வாசு சொன்னார். அந்தக்கோஷ்டி படத்தை விரைவில் தயாரிக்க ஆவல் கொண்டிருப்பதாகவும் பொங்கல் தினத்தில் படப்பிடிப்பை ஆரம்பிப்பதாகவும் இரண்டரை லட்சம் ரூபா முற்பணமாகக் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் வாசுகூறினார்என்று சாட்சி தெரிவித்தார். ஒரு மாதத்தில் 10 'கால்ஷீட்' வீதம் ஆறுமாதங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டதாகவும் தெரிவித்த எம். ஜி. ஆர். வாசுவுடன் இப்படிப்பேசிக் கொண்டிருந்தபோது ராதாவுக்கு ஒருபக்கமாக திருப்பி அமர்ந்திருந்ததாகவும் கூறினார். ''அந்தச் சமயத்தில் இடி இடித்தது போல் ஒரு சப்தம் கேட்டது. ஏதோ ஒன்று என் இடது காதின் வழியாக ஊடுருவிச் சென்றது'' என்று எம். ஜி. ஆர். கூறினார். ராதா தம்மைச் சுட்டுவிட்டதை உணர்ந்து கொண்டதாகக்கூறிய அவர் ராதா தம்மையே சுட்டுக் கொண்டு சோபாவின் அருகில் விழுந்தார் என்றும் கூறினார். ராதாவின் உடம்பின் எந்தப்பாகம் நிலத்தில் பட்டது என்பதைக் கூற முடியாதென்று எம். ஜி. ஆர். கூறினார் பின் கார் சாரதியைக் கூப்பிட்டு காரைஎடுக்கச் சொல்லி, ராதாவைக் கவனித்துக் கொள்ளும்படி வாசுவிடம் கூறிவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போனதாகவும் அவர் தெரிவித்தார்.

### 'அதோ' ராதா

இந்க்கட்டத்தில் ராதா கோர்ட்டுக்கு வந்திருக்கிறாரா என்று எம். ஜி. ஆர். கேட்டார். சுற்றிலும் பார்த்துவிட்டு 'அதோ, என்று ராதாவைச் சுட்டிக்காட்டினார், அதற்கு ராதா புன்னகை செய்தார். அது வெகு நேரம் நீடித்தது.

### உடைகள்

தாமும் ராதாவும் அணிந்திருந்த உடைகளையும் எம். ஜி. ஆர். அடையாளம்காட்டினார். அவர்மேலும் கூறியதாவது:—

காரில் போய்க்கொண்டிருக்கும் போது ராதா என்னைச் சுட்டுவிட்டதாகஎனது வளர்ப்பு மகனிடம் கூறினேன். ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் என்னைப் பரிசோதித்த டாக்டரிடமும் ராதா என்னைச் சுட்டுவிட்டதாகக் கூறினேன். பின்னர் பொலிசாருக்குக் கொடுத்த சுருக்கமான வாக்குமூலத்தில் ராதா சுட்டுவிட்டதாகக்கூறினேன் அந்த வாக்குமூலத்தில் நானும் என்னைக் கவனித்த டாக்டரும் கையெழுத்திட்டோம்.

### ராதா எதிரியா?

ராதா ஒரு எதிரியா எதிரி இல்லையா என்று சொல்ல முடியாதென்று தாம் கூறியதின் பொருளை எம். ஜி. ஆர். நீதிபதியிடம் விளக்கினார். தம்மைப் பொறுத்தவரை ராதாவுக்கு எதிராக குரோதம் இடையாது என்றும் ஆனால் சூட்டுச்சம்பவத்தின் பின்னர் ராதா எதிரிதான் என்று தெரிவித்தார்.

தென்றும் சாட்சி கூறினார். பல சந்தர்ப்பங்களில் 'நாத்திகம்' பத்திரிகையில் ராதா எழுதிய கட்டுரைகள் தமக்குக்காட்டப்பட்டிருப்பதாகவும் தம்மைப்பற்றி அவதூறாக எழுதப்பட்டிருந்ததாகவும், ஆனால் ராதாவின் குணம்தெரியும் என்றபடியால் ஆத்திரமடையவில்லையென்றும் எம். ஜி. ஆர். கூறினார்.

### காமராஜருக்கு எதிராக

அப்படியானஒரு கட்டுரையில் எம். ஜி. ஆர். பலரோடு சேர்ந்து காங்கிரஸ்தலைவர் காமராஜரைக் கொலை செய்ய சதிசெய்வதாக கூறப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். ராதாவுடன் சேர்ந்து பலபடங்களில் நடித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

### களைப்பு

சுமார் இரண்டரை மணி நேரம் சாட்சியமளித்தபின் களைப்பாய் இருப்பதாக எம். ஜி. ஆர், அரசாங்கவழக்கறிஞரிடம் கூறினார். இன்னும் அரை மணிநேரத்தில் சாட்சியத்தைமுடித்துவிடுவதாகவும் அதுவரைபொறுத்துக் கொள்ளும்படியும் அரசாங்க வழக்கறிஞர் அவரிடம் கூறினார். ஆனால் இந்த சம்பாஷணையைக்கேட்டநீதிபதி திரு. லட்சுமணன்சாட்சியை வற்புறுத்தத் தேவையில்லை யென்றும் வியாழக்கிழமை வரை விசாரணையை ஒத்திவைப்பதாகவும் கூறினார். எம். ஜி. ஆர். கோர்ட்டைவிட்டுப் போனபோது களைப்படைந்து காணப்பட்டார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### அகதிகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
துக்கொடுப்பது, தமிழ்நாட்டிலும் மைசூரிலும் மற்றும் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் புதிய ரப்பர் தோட்டங்கள் அமைப்பது. தமிழ்நாட்டில் தனியார் துறையில் இலங்கையிலிருந்து திரும்புவோருக்கு வேலை வாய்ப்பளிப்பது ஆகியவை நாளை சனிக்கிழமை நடைபெறும் மகாநாட்டில் ஆராயப்படவிருக்கும் சில திட்டங்கள் எனத்தெரிகிறது.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

நியூ காலிங்கஸ்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
பார் மகளே பார்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
எஸ். எஸ். ஆர்-விஜயகுமாரி
நடித்த
காஞ்சித்தலைவன்

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m
9-45 p. m.
Kerwin Mathews
Pier Angelt
Panic in Bangkok

### நீண்ட காலம் உறங்கும் சங்கம்

மூதூர், வியா.

மூதூர்ப் பகுதியிலுள்ள சைவவளர்ச்சி சங்கங்களுக்கு முதன்மையானதும் முன்னோடியானதுமான சங்கம் மூதூர் இந்து வாலிபர் சங்கம். இது 1954ம் வருடம் ஸ்தாபிதமானது. அன்று முதல் கடந்த 1961ம் ஆண்டு வரையில் இளைஞர்களின் சளையா உழைப்பாலும், தன்மையாலும் ஆண்டுக்கொரு பொதுக் கூட்டமும், அடிக்கடியானநிர்வாக சபைக்கூட்டமும் நடத்தி திருப்திகரமாக இயங்கி வந்தது. இத்தகைய சங்கம் 1961ம் ஆண்டுக்குப்பின்னர் தனது பொதுக் கூட்டத்தையோ, அன்றி நிர்வாகசபைக் கூட்டங்களையோ காணாது சோபையிழந்துவாடிக் கிடக்கிறது.

### புதியநியமனங்கள்

மூதூர், வியா.

கடந்த ஒரு வருடகாலமாக நிரந்தர வைத்திய அதிகாரியின்றி இருந்து வந்த மூதூர் பிரதான வைத்தியசாலைக்கு டாக்டர் தெய்வேந்திரனும் திருமதி (டாக்டர்)தெய்வேந்திரனும் நியமனம் பெற்றுள்ளனர்.

இங்கு பொலிஸ் அதிகாரியாக இதுகாலவரை கடமையாற்றிய திரு. கே ரத்தின நாயக்கா வேறிடத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றதால் தற்சமயம் மூதூர்ப் பகுதி பொலிஸ் நிலைய அதிகாரியாக பாலகிருஷ்ணன் நியமனம் பெற்றுள்ளார். இவர் முன்பு இரத்தினபுரிப் பகுதியில் கடமையாற்றியவர்.

தற்சமயம் மூதூர்ப் பகுதியின் அநேக பாடசாலைகளில்பல தற்காலிக தலைமை ஆசிரியர் கடமையாற்றி வருவதால் எதிர்வரும் புரட்டாதி மாதம் 1ம்திகதிமுதல் கொண்டு நிரந்தர தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். பாடசாலைகளின் 1ம்தர 2ம்தர தலைமை ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையாவும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது

### ''மூவாயிரம....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கூறினார். நூறு ரூபாவிற்கு 5 ரூபாய் கமிஷன் தரவேண்டுமென்று 1-ம் எதிரி சொன்னார். நூறு ரூபா பெறுமதியான கள்ள நோட்டிற்கு 50 ரூபா பெறுமதியான நல்ல நோட்டுத் தர வேண்டுமென 2-ம் எதிரி கூறினார்.

வேலணையை வந்தடைந்ததும், ஒரு உப-தபாற்கந்தோருக்கு அருகில் கதிரேசு காரை நிறுத்தச் சொன்னார். 2 எதிரிகளும் காரிலிருந்து இறங்கி, மாதிரிக் கள்ள நோட்டுக் கொண்டுவருவதாகக் கூறிச்சென்றனர். 15 நிமிடத்தால் இரு எதிரிகளும் வந்தனர். இரண்டு 50 ரூபா கள்ள நோட்டுத் தந்தார்கள். 1-ம் எதிரி தந்தாரா அல்லது 2-ம் எதிரி தந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் கள்ள நோட்டுக்களைப் பார்க்கிற மாதிரிப் பார்த்துவிட்டு இன்ஸ்பெக்டர் பாஸ்கரனிடம் கொடுத்தேன். பாஸ்கரன் பார்த்துவிட்டு சார் ஜண்ட்மெண்டிஸிடம்கொடுத்தார்.

நான் 3000 ரூபாவிற்குக் கள்ள நோட்டுக் கொண்டு வரும்படி சொன்னதும் இரு எதிரிகளும் சென்றனர். நாங்களும் பின்னால் சென்று கள்ள நோட்டுக்களைக் கைப்பற்றினோம். 2-ம் எதிரியிடமிருந்த கள்ள நோட்டுக்களை இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் கைப்பற்றினார் நான்சண்முகரத்தினத்தின் கையிலிருந்த கள்ள நோட்டுக்களைப் பறித்தேன். அவர்கள் இருந்த கட்டிலில் கிடந்த கள்ள நோட்டுக்களை இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் பாரமெடுத்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இரண்டாவது வாரம்!

வெஸ்லி [கொட்டாஞ்சேனை]
காமினி [மருதானை]
ராஜ் [நீர்கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர் ராமச்சந்திரன் - மாதவி
நடித்த



ஏவி எம். புரொடக்ஷன்ஸ்
அன்பேவா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org